Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு

குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 31-8-1946 ஆவணி 15உ { மலர் 47

நமக்கு வேண்டியது சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா?

☆

(தோழர் M. சிங்காரவேலு B. A., B. L.)

நமக்கு வேண்டியது சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா? இந்த பிரச்னைக்குக் கொடுக்கும் விடையில்தான், 200-கோடி உலகமக்களின் சுகாசுகங்கள் அடங்கியுள்ளன. இந்த விடையில்தான், 40-கோடி இந்திய மக்களின் சுகாசுகங்கள் அடங்கியுள்ளன.

It is in the solution of this problem, whether what is wanted is Swaraj or Socialist Raj, lies the happiness of misery of 2000 millions of the human race. It is in answer to this that the happiness or misery of the 400 millions of the Indian people lies. In facf, this is the crux of the Indian Problem:- இதுதான் மனிதப்பூண்டின் முக்கிய பிரச்சினை.

சுயராஜ்யமென்றால் என்ன?

உலகில் பண்டைகாலமுதல் வழங்கிவரும் தேசிய ராஜ்யமே சுயராஜ்யமெனப்படும். அது ராமராஜ்யமாயிருந்தாலும் சரி, அல்லது இராவண ராஜ்யமாயிருந்தாலும் சரி, இவையாவும் சுயராஜ்யமே. அல்லது தற்கால பிரெஞ்சு ராஜ்யமானாலும் சரி, பிரிட்டிஷ் ராஜ்யமானாலும் சரி இவையாவும் சுயராஜ்யமே. அல்லது மகாத்மா காந்தி கோரும் ராஜ்யமானாலும், தேசபந்து தாஸ் கோரிய ராஜ்யமானாலும் இவை இரண்டும் சுயராஜ்யமே. உலகிலுள்ள ராஜ்யங்களில், ஒன்றைத்தவிர, அதாவது, ருஷிய சோவியத் ராஜ்யத்தைத் தவிர, மற்றெல்லாம் சுயராஜ்யமெனப்படும்; இந்த சுயராஜ்யங்களில் ஒன்றுக்கொன்று மேல் கீழ் கிடையா; உயர்வு தாழ்வு கிடையா; இந்த சுயராஜ்யத்தை நடத்துகின்ற திட்டம் குடி அரசாயிருந்தாலும் (Republican) அல்லது ஜனநாயக ஆட்சி (Democracy) யாயிருந்தாலும், அல்லது ஏகாதிபத்திய ஆட்சி (Autocracy) யாயிருந்தாலும்; என்ன வகையாக இருந்தபோதிலும், இவையாவும் சுயராஜ்யமே. அல்லது ராஜா அரசாளும் அரசாயிருப்பினும், சக்ரவர்த்தி அரசாளும் அரசாயிருப்பினும், இவையாவும் சுயராஜ்யமே.

சுயராஜ்ய இலட்சணம்

இவ்விதமாக, பல வேறுபட்ட அரசுகளின் முக்கிய குறியென்னவென்றால், பலர் பெயரால், சிலர் அரசு புரியும் விஷயமே முக்கியமான தேசிய ராஜ்யத்தின் குறியாகும். இரண்டாவது குறியென்னவெனில், அரசு புரியும் சிலர், தங்களுக்கும் தங்கள் இனத்தாருக்கும் நன்மை உண்டாகும்படி அரசு புரிவதேயாகும். மூன்றாவது குறியென்னவெனில், தத்தம் தேசங்களை மற்ற தேசங்களைவிட விசேஷப்படுத்துவது. நான்காவது, சாமானிய குடிகளுக்கு அதாவது 100க்கு 98 பேருக்கு, இந்த தேசங்களில் நடத்தப்படும் அரசியலில் நேராக செலுத்தவேண்டிய அதிகாரம் ஒன்றும் கிடையாது. ஐந்தாவது, எங்கள் தேசம் எங்கள் நாடு என்ற மனப்பான்மை குடிகொண்டுள்ளது. இதைத்தான் தேசியமென்று வழங்குவது. பொதுவாக இவ்வைந்து குணங்களும் சுயராஜ்யத்தில் அடங்கியுள்ளன ஆதலின், எவ்வளவு நல்லெண்ணத்தோடு எவ்வளவு நன்மை பயக்கும் காரியங்களைச் செய்வதாகச் சொன்னபோதிலும், யாதும் விவகாரத்தில் பிரயோஜனப்படுவதில்லை; யாரும் சுகப்படுவதுமில்லை. 'காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்பது போல், அரசாங்க வர்க்கத்தினர், (The Governing Class), தங்கள் இனத்திற்கே எல்லா சுகபோகங்களையும் சேர்த்துவைத்துக் கொண்டு, தங்களுக்கு வேண்டிய சட்டதிட்டங்களால், தங்கள் அதிகாரத்தைப் பாதுகாத்து வருகின்றார்கள். இந்த மனப்பான்மையால் ஆளுகின்றவர்களுடைய நன்மையை தாங்கள் கருதுவார்களே யொழிய;

தாங்கள் ஆளும் பிரஜைகளுடைய நன்மையைக் கவனிப்பதில்லை. ஆனபடியால் தான், வேதகாலமுதல் நாளது வரை உலக பெரும்பான்மை மக்களை, முக்கியமாக இந்திய தேசமக்களை, பஞ்சமும், தரித்திரமும், இல்லாமையும், நோயும், பகுத்தறிவின்மையும், மூடபக்தியும் அகால மரணமும் வாட்டி வருகின்றன.

தேசியமும் போரும்

சுயராஜ்யத்தின் அதாவது தேசியத்தின் இலட்சணம் இன்னொன்றுண்டு. பிறருடைய நாட்டைப் பிடிப்பதே தேசியத்தின் இயல்பாகும். உலகில் நடந்த போரெல்லாம் தேசியமென்று சொல்லப்படும் மண்ணாசைக்குத் தான் புரியப்பட்டன. பாரத போர் மண்ணுக்காகவும் ராமாயணப்போர் பெண்ணுக்காகவும், மற்றப் போர்கள் யாவும் மண்ணுக்காகவும் பெண்ணுக்காகவும் புரியப்பட்டு வந்திருக்கின்றன. கால்டியன் (Chaldean) அசிரியன் (Assyrian) சண்டை முதல் ஈஜிப்ட், அரேபியா சண்டை வரை, எல்லா சண்டைகளும் மண்ணுக்காகவே புரியப்பட்டு வந்திருக்கின்றன. வேதகாலமுதல், நாளதுவரை இந்தியாவில் புரிந்த சண்டைகள் யாவும், இந்த மண்ணுக்காகவே. ஐரோப்பா தேசத்து சண்டைகள் யாவும், தேசியத்தின் பேரால் நடந்தவைகளே. ஆசியா கண்டத்தில் புரிந்த போர்களெல்லாம், இந்த மண்ணைப் பிடிக்குவதற்கே. ஐரோப்பிய ஏழு வருட சண்டை, முப்பது வருட சண்டை, நூறு வருட சண்டை, மத்தியகால சண்டை, நெப்போலியன் சண்டை, ரஷிய துருக்கி சண்டை, சீனா ஜப்பான் சண்டை, முதல் மகாயுத்தம் நேற்று நடந்த 2ம். மகா யுத்தம் எல்லா சண்டைகளும் B. C. முதல், 1945 A. D வரை புரிந்துவந்த சண்டைகள் யாவும் தேசிய மண்ணைப் பிடிக்கவே புரியப்பட்டன. நமது இந்திய நாட்டின்மீது முகமது கஜினி என்போன், 2½ தடவை படையெடுத்தானாம்! ஜப்பான் தேசத்து ஜின்கோ என்ற சக்ரவர்த்தினி கொரியாமீது 100 தடவை படையெடுத்தனளாம். கடைசியாக நமது பிரிட்டிஷாரும் இந்திய நாட்டை போர்புரிந்து இந்திய மண்ணைப் பிடித்து 200 வருட காலமாக ஆண்டு வருகின்றனர். கடந்த 6000 வருடங்களாக, நடந்த சண்டைகளால் மாண்டவர்கள் எத்தனை, அனாதைகள் எத்தனை, பொருள் அழிவு எத்தனை, நாசமான நாடுகள் எத்தனை, கணக்கெடுக்க முடியுமா! இவ்வளவும் தேசியத்தால் (Nationalism) வந்ததென உணர்க.

காந்தியார் சுயராஜ்யத்தில் இவ்வித போர் நடக்காதென்பது, என்ன நிச்சயம்? இதுவும் தேசிய ராஜ்யமாதலால் அதன் அறிகுறியாகிய சண்டையும், போரும், நிகழாமல் இருக்காதெனவும் உணர்க. 'சாத்மீகம்' 'சாத்மீகம்' என்பது சமயோசிதச் சொல்லே யொழிய காரியாம்சத்தில் அச்சொல்லால் யாதொன்றும் பயனிராது. "என் தேசம்" "உன் தேசம்" என்ற வித்தியாசம் இருக்கும் வரை, போர்கள் நடந்தே தீரும். இந்திய சுயராஜ்யத்தில், இந்தியநாடு போரற்று வாழுமென்பது வீண்பேச்சு. இந்த தேசிய முதலாளிகளே, இந்த வர்த்தகர்களே, இந்த ஜட்ஜுகளே, இந்த லாயர்களே, சுயராஜ்யத்தில் அரசுபுரியப் போகின்றவர்கள். இவர்களுடைய செல்வத்தையும், செல்வாக்கையும் ஆதிக்கத்தையும், பாமர மக்களுக்குச் சரிசமத்துவமாக விட்டு கொடுக்கப் போகின்றார்களா? அது ஒருபோதுமில்லை. பிறருடைய நாட்டின் செல்வத்தின் மேல் இவர்களுக்கெல்லாம், ஒரு கண் இருந்தே தீரும். இனி வரப்போகும் சுயராஜ்யம், ராமராஜ்யத்தைப்போல் இருக்குமென்று சொல்லும்போதே, அந்த சுயராஜ்யத்தின் லட்சணம் உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கிவிட்டது. ராமன் குழந்தை பருவ முதல் சாகும் வரை போர்புரிந்து வந்திருக்க, இனி வரும் ராமராஜ்யம் போரற்று இருக்குமாவென்று கேட்கின்றோம்? இலங்கை அழிந்தது சீதையால் என்று சிறு பெண்கள் பாடும் கதையை மறக்கமுடியுமா? மாரீசன், சுபாகுவைக் கொன்று, தாடகையைச்சித்திரவதைச்செய்து, சூர்ப்பனகையை மூக்கையும், காதையும் அறுத்து, இறுதியில் இலங்கையையும், இராவணனையும் அழித்து, இலங்கைத் தீவு முழுமையும் கைப்பற்றியது அகிம்சையா என்று கேட்கிறோம்? இராமன் இலங்கையை விட்டுத் திரும்பி வந்ததும், சாந்தமாக ராஜ்யபாரம் செய்யவில்லையே. அயோத்திக்கு வந்தவுடன் உலகத்தை ஜெயித்து ஏகாதிபத்தியத்தை நிலைநாட்ட, தான் பெற்ற மக்களுடனே போர்புரிந்து, அஸ்வமேத யாகம் செய்ததை யார் மறப்பார்கள்? அயோத்தியிலிருந்து இலங்கைவரை, ரத்தக் களமாக்கிய ராமராஜ்யத்தைப் போல சாந்தி ராஜ்யமுமிருக்குமென்றால், இந்திய சுயராஜ்யத்தின் ஆபாசம் விளங்கவில்லையா! ஆதலின், காந்தியின் சுயராஜ்யத்தை உதறித்தள்ளுவதற்கு, இதுவொன்றே போதும். இதுவுமன்றி அகிம்சா தர்மியாகிய காந்தியாரும், நேற்று கொன்றவனைப் புகழ்ந்து போற்றியதை யாரும்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

கண்டு பிடித்து விட்டார்!

“அகிலபாரத ஆதிசைவ சமாஜத்தாரின் அலறல்”

“சிவாசாரியார் தம் மாநாட்டுத் தீர்மானங்களின் அவலட்சணம்!”

[வித்வான் மாவண்ணா தேவராசன்]

[“சித்தாந்தம்” என்ற “சமய வெளியீட்டின்” மலர் 19 இதழ் 8ல் 149—153 வரையுள்ள பக்கங்களில் வெளிவந்துள்ள “சென்னை அரசியலாருக்கு வேண்டுகோள்” என்ற கட்டுரையைப் படித்தேன்.

“சித்தாந்தம்” (‘அறிவின் எல்லை’)—பெரியார் ஈ. வே. ரா. வின் கட்டுரைத் தொகுதியைக் குறிப்பிடவில்லை—என்று சிவநெறியே தவநெறி எனக்கொண்டு (துறவறத்தே நின்று) வாழும் சில “சயசலச்சோம்பேறி”க் கூட்டங்களும், “சைவத்தின் மேற்சமயம் வேறில்லை; அதில் சார் சிவமாம் தெய்வத்தின்மேல் தெய்வம் இல்லை என்னும்” ‘செம்பொருள் வாய்மையை’ உணர்ந்தவர்கள் என்று தம்மை எண்ணிக்கொண்டு, கவைக்குதவாத ‘தெய்வத் திருப்பணிகளைக், காலந்தவறாது செய்வதுபோல் நடித்துக் காவு நெஞ்சுடன் காலந்தள்ளும் சில (கிணற்றுத் தவளைகள்போலும்) “விரிவிலா அறிவு” மிக்க சைவ ஆசிரியர்களும், ‘கட்டிலறையினிலே-எழில்—கன்னியர்களுடனே— தட்டினில் பட்சணங்கள்—சகிதம்— சைவத்தை ஆரம்பிக்கும்’ சில மடாதிபதிகளும், ‘ஏழ்மையினால் ஒரு தமிழன் படிக்கவில்லை என்றால்’ நாணி நிற்கும் நிலை என்றுதான் அடைவார்களோ? என்று ஏங்கினேன். இந்தத் தமிழகத்தின் தாழ்வுக்கு ஒரு காரணமாயுள்ள சைவாசிரியர்களும், மடாதிபதிகளும் உண்மையை உணர்ந்து உற்றாரிலும் திருந்தட்டும் என்ற நம்பிக்கையின் மேல் இக்கட்டுரையை எழுதுகிறேன்]

சென்னை அரசாங்கத்தார், ‘இந்து மத அறநிலையங்களின் வருவாயின் மிச்சமாகும் பணத்தைச் சமயக் கல்வியோடு உலகியல், பொது அறிவுக் கல்விக்கும் பயன்படுத்தவேண்டும்’ என்ற முடிவுக்கு வந்திருப்பதைக் கேள்வியுற்றவுடனே, ‘இந்து மதத்திற்குத் தாங்களே காவலர்கள்” என்று (தன்மானமின்றி) எண்ணிக்கொண்டுள்ள அகில பாரத ஆதிசைவ சமாஜத்தினர் ஆச்சாள்புரத்திலே மாநாடு கூட்டிச் சில (அவசியமற்ற) அவசரத் தீர்மானங்களை நிறைவேற்றிச் சென்னை அரசியலாருக்கு அனுப்பியுள்ளனர், அவைகளை நடைமுறையில் கொண்டுவரத்தக்க ஏற்பாடுகளை உடனடியாகச் செய்யத் ‘தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கத்தலைவர்’ திருச்சி மலைக்கோட்டை ஸ்ரீலஸ்ரீ மௌன—சோமசுந்தரத்தம்பிரான் “சுவாமிகளுக்கு” முழு அதிகாரமும் அளித்திருக்கின்றனர்.

அத்தீர்மானங்களில் சில:-(1) அர்ச்சகர்களும் அறநிலையப்பாதுகாப்பு அதிகாரிகளும் சமய அறிவில் கிரியை-ஞான மார்க்கங்களை நன்கு படித்தவராக இருக்கவேண்டுமாம். அதற்காக “மாகாண மத்திய சமய சாஸ்திர கல்லூரியும், அதற்குக் கிளைக் ‘கல்லூரிகளும் ஏற்படுத்தவேண்டுமாம். (2) ‘இந்து சமய சாஸ்திரப் பாதுகாப்புக் கழகம்’ ஒன்று நிறுவிச் சைவ-வைணவாகமங்களையும், சாஸ்திர நூல்களையும் வெளியிடவும், சமய வளர்ச்சிக்கு வெளியீடுகள் நடத்தவும் வேண்டுமாம். (3) கல்லூரிகளில் கற்றுத் தேர்ச்சிபெற்ற சமயப்பிரச்சாரகர்களைக்கொண்டு கிராமந்தோறும் சமயப்பணிசெய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமாம். (4) பழுதுபட்டுள்ள அறநிலையங்களையும் புதுப்பிக்க வேண்டுமாம். (5) ஆக இத்தனை “செயற்கரிய—மக்களின் உயிர்வாழ்வுக்கு இன்றியமையாத—“பெரிய—சிறந்த செயல்களுக்கே அறநிலையங்களில் செலவுபோக மிஞ்சும் பணத்தைச் செலவிடவேண்டும் என்று அறநிலையப் பாதுகாப்புச் சட்டங்களைத் திருத்தவேண்டுமாம்.

“சாந்தியால் உலகம்
தழைப்பது நன்றா?
சமய பேதம் வளர்த்தே
தாழ்வது நன்றா?”

என்று கேட்கிறார் புரட்சிக்கவி. தோழர்களே, ஆய்ந்து பாருங்கள்!

“கோயிலுக்கென்று
கொடுப்பது நலமா?
கோடி கொடுத்தும்
கல்வி கொள்வது நலமா?”

கூறுங்கள் தோழர்களே.

“கல்வி கீழோரடை” நாலாம் சாதியார்க்குப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது சாஸ்திரங்களிலே! இன்றைய பொதுமக்கள் ஆட்சியிலேயே, மக்களுக்குக் கட்டாயக் கல்வி இல்லை! “தகுதி” என்றும் “திறமை” என்றும் சாக்குப் போக்குகூறித் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் திராவிடர்கட்கும் உயர்ந்த கல்வி பெறும் வசதியைத் தடை செய்துள்ளனர்! மற்ற நாடுகளில் எல்லாம் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக 100க்கு 90, 95பேர் கல்வியில் வல்லவராய் விளங்க, ஆண்டுக்கு ஒரு முறை ஆயுதபூசையும் சரஸ்வதி பூசையும் செய்து, ஆரிய ஆசிரியர் தம் அகமகிழப் பாதகாணிக்கைக் கொடுத்துக்கோடிக் கணக்கில் பொருள் செலவிட்டும், நம்மில் 100க்கு 13பேர்களுக்குத்தான் கலைமகள் கடைக்கண் பார்வை தந்திருக்கிறாள்! இதைவிட மானக்கேடு, கள் விற்றுவரும் காசைக்கொண்டு நாம் கல்வியை வளர்க்கும் காட்சி! இப்படிப்பெறும் கல்வியாவது உலக அறிவு தரும் உயர்ந்த கல்வியாக இருக்கிறதா? படிப்பன எல்லாம் பரலோகத்துக்கும், பனியா, பார்ப்பனியக் கூட்டாட்சிக்கும் அடிமையாய் வாழும் வழியைத்தானே காட்டுகின்றன!

இந்த அழகில், ‘கள்ளுக்கடை மூடுவதைக் காரணமாய்க் காட்டிப் பள்ளிக்கூடங்களையும் மூடி நம் கல்விக் கண்ணைப்பறிக்கும் காருண்ய காங்கிரஸ்’ மந்திரிகள், ஏதோ தவறிப் போய்த் தம்மை மறந்தவராய், அறநிலையச்சொத்தில் ஆண்டவனுக்கும் ஆரியத்துக்கும் படி அளந்தப்பறு

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

குடி அரசு

1946-ஆம் ஆகஸ்டு-மீ 31உ

காங்கரசும் இறக்குமதியும்

தென்னாட்டில் காங்கரஸ் இயக்கத்திற்குச் செல்வாக்குக் குறைந்தாலோ அல்லது காங்கரஸ் இயக்கத்திலுள்ளவர்களுக்குள்ளேயே தகராறு ஏற்பட்டாலோ அதைச் சரிப்படுத்துவதற்கு வடநாட்டிலிருந்து யாரையேனும் ஒருவரை இறக்குமதி செய்வது தென்னாட்டுத் தேசியத் தோழர்களின் இயல்பாய்விட்டது.

தென்னாட்டில் பார்ப்பனர்கள் காங்கரஸ் இயக்கத்தைத் தங்கள் சொந்த நலத்திற்காகப் பயன்படுத்தி வருகின்றனர். அது மாத்திரமன்றி அவ்வியக்கத்திலுள்ள ஏனைய மக்களை இழிவுபடுத்தியும் வருகின்றனர். இவ்வுண்மை மறுக்கமுடியாததொன்று. இதை உணர்ந்த பெரியார் இராமசாமி, மக்களுக்கு 26 ஆண்டுகளுக்கு முன்னரே காங்கரஸ் இயக்கத்தின் போக்கை நன்கு எடுத்துக் காட்டினார். எடுத்துக் காட்டியது மாத்திரமன்றி அந்நிலையை ஒழிக்கவும் முயன்றார். அங்ஙனம் முயன்றதின் காரணமாகப் பார்ப்பனர்களின் சூழ்ச்சி அம்பலப்படுத்தப் பட்டது. ஆனால் பார்ப்பனர்கள் "இந்தியாவில் இராமராஜ்யத்தை ஆக்குவதற்காகவே பாடுபட்டுக்கொண்டிருக்கும் தோழர் காந்தியாரிடம் தங்கள் செல்வாக்கு மங்காமலிருப்பதற்கு ஆதரவை நாடினர். அதுகாலை காந்தியாரின் கண்ணோட்டமும் பார்ப்பனர்களின் பக்கமே இருந்ததுமன்றி பெரியார் இராமசாமியும் மற்றும் பலரும் பார்ப்பனத் துவேஷிகள், வகுப்புவாதிகள் என்ற பட்டங்களையும் பெறச் செய்தது. மானமொன்றையே பெரிதாகக்கொண்ட மறத்தமிழர் ஒழியந்த பெரியார் காங்கரசில் திராவிடர்களின் இந்நிலையைப் போக்க வழி பிறக்காது என்பதையுணர்ந்து காங்கரசையே விட்டு விலகி விட்டார். இந்நிகழ்ச்சி அந்தக் காலத்திலே.

அண்மையில் நடந்தது காமராச நாடார் ஆச்சாரியார் தகராறு. தகராறின் விளைவாக ஆச்சாரியாரின் செல்வாக்கும் அவர் இனத்தவரின் செல்வாக்கும் அடியோடு அழிந்துவிடும் என்று பல தேசியத் தமிழர்கள் எதிர்பார்த்தனர். ஆனால் அது ஒருக்காலும் முடியாதென்று நாம் அடிக்கடி கூறி வந்துள்ளோம். அதன்படியே நிகழ்ச்சி நடைபெற்றிருப்பதை யாரும் மறுக்கமுடியாது.

இத்தகராறைத்தீர்த்துவைப்பதற்கு முதலில் ஆஸப்அலி இறக்குமதி செய்யப்பட்டார். ஆனால் அவரால் ஒன்றும் சாதிக்க முடியவில்லை. பின்னர் ஆச்சாரியாரின் முயற்சியால் தோழர் காந்தியாரே தமிழ்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டார். தமிழர்கள் கருதியதாவது தீர்ப்பு தமிழர்களுக்குச் சாதகமாயிருக்குமென்று. உள்ளபடியே தோழர் காந்தியார் தமிழர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தால் அவர் கூறிக்கொண்டு வரும் இராமராஜ்யத்திற்குப் பொருளில்லாமல் போய்விட்டிருக்கும் என்பதை அவர் நன்குணர்வார். அதன் காரணமாகவே உண்மையைக்கூட மறைத்து ஆச்சாரியாருக்குச் செல்வாக்குத் தேடிக்கொடுக்க முயன்றதுமன்றி தமிழர்கள் மனம் புண்படும்படியாகக்கூட காந்தியார் தீர்ப்பளித்தார். இத்தீர்ப்பைத் திராவிடர் கழகத்தாராகிய நாங்கள் எதிர்பார்த்ததே. காரணம் காந்தியார்கூறும் இராமராஜ்யத்தில் ஆட்சி எப்படியிருக்கும் என்பதை நாங்கள் ஆராய்ச்சி செய்து பார்த்தவர்கள்; அந்த இராஜ்யத்தில் பார்ப்பனர்களுக்குத்தான் எவ்வகை உரிமையுமுண்டு என்ற உண்மையை உணர்ந்தவர்கள். எனவே அன்னாரின் கொள்கைச் சிறிதும் பாதிக்கப்படாத வகையில் தீர்ப்பளித்தார். இதில் என்ன வியப்புள்ளது? ஆனால் தீர்ப்பு தமிழர்களின் மானத்தைப் போக்கக்கூடியதாயிருப்பினும் அதைப்பற்றிக் கவலை கொள்ளாமல் இருக்கும் தேசியத் தமிழர்களை என்னென்று சொல்வது? அதுதான் போனால் போகிறதென்றால் இப்போது ஆச்சாரியார் திருவடிகளே சரணம்கூட, நடைபெறுகின்றதே! மறத்தமிழர் என்று கூறிக்கொள்ளும் இனத்தவரா இந்நிலையில் நடந்து கொள்வது?

அது போகட்டும். இப்போது ஓர் புதிய இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அதன் காரணம் யாதாயிருக்குமென்று அறிந்து கொள்ளவேண்டியது நம்மவர்களின் கடமையாகும்.

இப்போது காங்கரஸ் மந்திரி சபை ஆட்சி மன்றத்தில் அமர்ந்துள்ளது. "மக்களின், சிறப்பாகத் தொழிலாளர்களின் நன்மைக்காகவே ஆட்சிமன்றம் புகுகின்றோம்" என்ற பேச்சு தேர்தல் காலத்திலேதான். ஆட்சி மன்றத்தில் நுழைந்ததும் அவர்களின் தனிப்பட்ட நலன்களைப்பற்றி கவலை எடுத்துக்கொண்டனரே யொழிய மற்றவர்களைப்பற்றிய கவலை அவர்களுக்குக் கடுகளவும் இடையாதென்றே சொல்லலாம். இல்லை, கவலைப் படுகின்றார்கள். எவ்வகையில்?

அவர்களின் எழுச்சியை அடக்குவதிலும், கண்ணீர்ப் புகையைக்கொண்டு அவர்களின் கூட்டத்தைக் கலைப்பதிலும், தடிகொண்டு தொழிலாளர்களைத் தாக்குவதற்குப் போலீசாருக்கு முழு உரிமை கொடுப்பதிலும், துப்பாக்கிப் பிரயோகஞ் செய்யக்கூட போலீசாருக்குக் கட்டளையிடுவதிலும்தான் கவலை கொள்கின்றனர்.

தன் நியாயமான தேவையைக்கூறி நலம் பெறலாமென்று மகன் தந்தையிடம் செல்கின்றபோது தந்தை அவனைத் தடிகொண்டு தாக்கினால் மகன் தந்தையைப்பற்றி என்ன நினைப்பான்? அப்படிப்பட்ட தந்தையை மகன் விரும்பவா செய்வான்?

அதேபோல்தான் இன்றைய காங்கரஸ் ஆட்சியில் தொழிலாளர்களின் நிலைமையிருக்கிறது. எனவே காங்கரஸ்காரர்களால் தொழிலாளர்கள் புறக்கணிக்கப்படுகின்றார்கள் என்ற உண்மையை உணர்ந்துவிட்டனர் தொழிலாளர்கள். ஆகவே அவர்கள் தங்களின் நன்மைக்காகப் பாடுபடுகின்ற பிறகட்சிகளைப் பற்றுக்கோடாகக் கொள்வதென முடிவு செய்துவிட்டனர். அம்முடிவுபடி இந்நாட்டில் தொழிலாளர் நலனுக்காக ஓரளவில் பாடுபடுகின்ற கம்யூனிஸ்ட் கட்சியில் பல தொழிலாளர்கள் சேர்கின்றனர். இன்னும் பல தொழிலாளர்கள், தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவதையே குறிக்கோளாகக்கொண்ட திராவிடர் கழகத்திலும் சேர்கின்றனர். இதைக்காணும் காங்கரஸ்காரர்கள் கதிகலங்குகிறார்கள். காரணம் தொழிலாளர்களின் செல்வாக்கு நாளுக்குநாள் காங்கரஸ் இயக்கத்திற்கு இல்லாமற் போவதுதான்.

அதே நேரத்தில் ஆளும் கூட்டம் உணர்ந்துவிட்டது வருங்காலத்தில் தொழிலாளர்களுடைய ஆட்சிதான் நிலைபெறும் என்ற உண்மையை. ஏனெனில் உலக வரலாறு அவர்களுக்கு உணர்க்கின்றது வருங்காலத்தில் தொழிலாளருக்குத்தான் நாடு சொந்தமாகும் என்று.

பாடுபட்டும் பட்டினிக்கிடக்கும் பாட்டாளிமக்கள் நாளுக்குநாள் காங்கரஸ் இயக்கத்தை விட்டுவிலகுகின்றனர். விலகிய தொழிலாளர் ஒன்று திரண்டு தங்கள் உரிமைக்காகப் போரிடத் துணிவாராயின் தொழிலாளர்களின் உழைப்பால் உயர்வெய்திய முதலாளி வர்க்கம் அடியோடு அழிந்துவிடும். பாட்டாளி மக்களின் பணத்தைப் பலவகையிலும் கொள்ளை கொள்ளும் பணக்காரர்களின் ஆர்ப்பாட்டம் முற்றிலும் தொலைந்துவிடும். இந்நிலைமை வருங்காலத்தில் உண்டாவது உறுதி, உறுதி. இதனை உணர்ந்த காங்கரஸ் முதலாளி வர்க்கம் அஞ்சாமலிருக்குமா? அங்ஙனம் அஞ்சுவதின் காரணமாகத்தான் அவர்கள் இன்று தொழிலாளர்களின் எழுச்சியைக் குறைகூறுவது மாத்திரமன்றி நசுக்கவும் முனைந்துள்ளனர். அப்படி நசுக்குவதற்காகப் போடப்பட்ட திட்டங்களுள் ஒன்றாக இருக்குமோ என்று ஐயப்படவேண்டியிருக்கின்றது அருணா ஆசப் அலி தென்னாட்டில் இறக்குமதி செய்யப்பட்டதை நினைக்க. அந்த அம்மையார் தென்னாட்டின் பல நகரங்களிலும் பேசிய பேச்சுக்களிலிருந்து நன்கு புரிந்துகொள்ளலாம் நாம் கூறும் கூற்றில் உண்மையிருக்கிறது என்பதை.

"தொழிலாளர்கள் கம்யூனிஸ்டு கட்சிகளிலும் இதர அரசியல் கட்சிகளிலும் சேரக்கூடாது; காங்கரஸ் இயக்கத்திலேதான் சேரவேண்டும்; அது ஒன்றுதான் தொழிலாளர்களின் நன்மைக்காகப் பாடுபடும் இயக்கம்; கம்யூனிஸ்டு கட்சியினர் இரஷ்யநாட்டுக் கூலிகள்; இரஷ்யநாட்டு ஆட்சியை இந்தியாவில் நிலைநாட்டத்தான் கம்யூனிஸ்டு கட்சியினர் பாடுபடுகின்றனர்" இவை அருணா அம்மையாரின் அருள் மொழிகள்.

உண்மையிலேயே கம்யூனிஸ்டுக்காரர்கள் இந்தியாவில் இரஷ்ய நாட்டு ஆதிக்கத்தை நிலைநிறுத்தத்தான் பாடுபடுகின்றனரா என்பது வேறு செய்தி. உண்மையான பொதுவுடைமைத் தத்துவத்தை அவர்கள் தொழிலாளர்களுக்கு எடுத்துரைக்கின்றனரா என்பதும் வேறு செய்தியே. ஆனால் அவர்கள் தொழிலாளர்களின் நன்மைக்காக ஓரளவில் பாடுபடுகின்றனர் என்பது மறக்கமுடியாத உண்மை. காங்கரஸ்காரர்களும், அருணா அம்மையார் போன்ற காங்கரஸ் இடதுசாரி கட்சியினர்களும் கூறுவதுபோல மாஸ்கோ மணமா இப்போது இந்தியாவில் வீசுகின்றது என்று கேட்கிறோம். அங்ஙனம் வீசுமாயின் இன்றைக்கு நாட்டின் நிலைமை என்ன ஆகும்? பணக்காரர்களின் மமதை நிறைந்த நடைமாட்டமும், முதலாளிகளின் ஆணவமிகுந்த ஆதிக்கமும், உயர்ந்த சாதிக்காரர்களின் ஒய்யாரநடையும், மடாதிபதிகளின் லீலா விநோதங்களும் நாட்டிலே தாண்டவமாடுமா?

எனவே உண்மையிலே மாஸ்கோ மணம் வீசாத நேரத்தில் மாஸ்கோ மணம் மக்களை மயக்கிவிடும் என்று அஞ்சி பல சூழ்ச்சிகளைக் கையாண்டு தொழிலாளர் இயக்கத்தைச் சிதற அடிக்கும் வேலையிலீடுபடுபவர்கள் உள்ளபடியே மாஸ்கோ மணம் வீசும் நேரத்

திலே இவர்கள் என்ன செய்வார்கள் என்று கேட்கிறோம். வருங்காலத்திலுங்கூட திராவிட நாட்டின் ஆட்சிமுறை இரஷ்ய நாட்டின் ஆட்சியை ஓரளவில் ஒட்டித்தான் இருக்கும் என்பதையும் இவ்விடத்தில் வலியுறுத்த விரும்புகின்றோம்.

இன்னும் அருணா அம்மையாரின் பொன்மொழியைக் கேளுங்கள். "காங்கரஸ் தலைவர்கள் ஆட்சி மன்றத்தில் அமர்ந்திருப்பது ஒருவேளை நாட்டு மக்களுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடியதாயிருந்தாலுமிருக்கலாம். தொழிலாளர்களின் செல்வாக்குக் காங்கரசுக்கு இல்லாமற் போனாலும் போகலாம். எனவே காங்கரஸ் இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தொழிலாளர்கள் காங்கரஸ் இயக்கத்திற் சேரும்வண்ணம் பாடுபடவேண்டும். ஆகஸ்ட் தியாகிகள் இதற்கான செய்யவேண்டும்" என்று பேசுகிறார்.

அம்மையார் தொழிலாளர்களின் செல்வாக்கைக் காங்கரசுக்குத் தேடவேண்டுமென்று பேசியதைப்பற்றி குறைகூறுவதற்கில்லை. ஆனால் அங்ஙனம் தொழிலாளர்களைக் காங்கரசிற் சேரச் செய்வதற்குக் கையாளும் முறைதான் நமக்கு வியப்பை அளிக்கின்றது. மாநாடு போட்டும், பொதுக்கூட்டம் கூட்டியும் கம்யூனிஸ்டு கட்சியைக் கண்ணியமற்ற முறையில் திட்டுவதினால் தொழிலாளர்களின் ஆதரவு கிடைக்குமென்று கருதினால் அச்செய்கை எப்படி பகுத்தறிவுக்குப் பொருத்தமானது என்று கருத முடியும்? இங்ஙனம் திட்டுவதால் காங்கரஸ்காரர்கள்மேல் பொதுமக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் வெறுப்புண்டாகுமா அல்லது விருப்புண்டாகுமா?

மேலும் ஆகஸ்ட் கலவரத்தில் பொதுமக்களைப் பாதிக்கும் முறையில் நடந்துகொண்ட ஆகஸ்ட் காலிகளின்மேல் வெறுப்புக்கொண்ட மக்கள் நாட்டில் பலருண்டு. அவர்களில் சிலர் காந்தியார் ஆகஸ்ட் கலவரத்திற்கு இசையவில்லை என்று கருதிக்கொண்டு ஆகஸ்ட் கலவரத்தில் காலித்தனம் செய்தவர்களை வெறுக்கின்றனர். அப்படிப்பட்டவர்களின் மனப்பான்மையை மாற்ற "காந்தியாரின் கட்டளைப்படிதான் ஆகஸ்ட் கலவரம் நடைபெற்றது" என்று அருணா அம்மையார் கூறுகின்றார். இதன் உண்மை எப்படியிருந்தாலும் நாளது வரையில் காந்தியார் ஆகஸ்ட் கலவரத்திற்குத் தான்தான் பொறுப்பாளியென்று தன் சொந்த வாயால் சொல்லவேயில்லை. அப்படியிருந்தும் அருணா ஏன் இவ்வண்ணம் கூறுகின்றார்? காந்தியார் சம்மதம் பெற்றுத்தான் நாங்கள் கலவரத்திலிறங்கி காலித்தனம் செய்தோம். எனவே எங்களை வெறுக்காதீர்கள் என்று அம்மையார் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறார்கள் என்று நினைக்கவேண்டியிருக்கின்றது.

மேலும் "ஆகஸ்ட் கலவரத்தில் கலந்துகொண்டவர்கள் உண்மையான அஹிம்சைத் தத்துவத்தைக் கடைபிடித்தவராவார்" என்று கூறுகின்றார் அம்மையார். காந்தியார் கூறும் அஹிம்சை தத்துவத்திற்கும், அம்மையார்கூறும் அஹிம்சைத் தத்துவத்திற்கும் உள்ள பொருத்தத்தை யாம் விளங்கிக்கொள்ள இயலவில்லை.

இப்படிப்பட்ட வகைகளையெல்லாம் கையாண்டு பொது மக்களின், சிறப்பாகத் தொழிலாளர்களின் ஆதரவைப் பெறலாம் என்ற முடிவிற்கு வந்துள்ளனர் காங்கரஸ்காரர்கள். ஆனால் பொதுமக்களும், தொழிலாளர்களும் வடநாட்டு மக்கள் தென்னாட்டிற்கு வந்து செய்யும் தப்புப் பிரசாரத்தை நம்பக்கூடாது என்பதே நமது கருத்து.

நாட்டின் பல பாகங்களிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கொண்டு, முதலாளிகளும், பணக்காரர்களும், உயர்ந்த ஜாதிக்காரர்களும், காங்கரஸ் இயக்கத்தில் சேர்ந்துகொண்டு பாட்டாளி மக்களின் இரத்தத்தை உறிஞ்சி ஆட்சி நடத்தலாமென்று கனவு காண்கின்றனர் என்று நினைக்கவேண்டியிருக்கின்றது. அதற்காகத்தான் காங்கரஸ்காரர்கள் இன்று, காங்கரஸ் கட்சியைத் தவிர ஏனைய முஸ்லிம் லீக், தாழ்த்தப்பட்டோர் கட்சி, கம்யூனிஸ்டுகட்சி, திராவிடர் கழகம் ஆகிய கட்சிகளை எந்த வகையிலாவது ஒழித்துக்கட்ட முனைந்திருக்கின்றனர்.

அந்த அடிப்படையில்தான் தென்னாட்டில் காங்கரஸ் இயக்கத்திற்குச் செல்வாக்குக் குறைகின்ற இந்த நேரத்தில், அதாவது முதலாளிகளுக்கும், பணக்காரர்களுக்கும், உயர்ந்த சாதிக்காரர்களுக்கும் செல்வாக்குக் குறைகின்ற இந்த நேரத்தில் வடநாட்டுக்காரர்களைக்கொண்டு பிரச்சாரம் செய்து சரிபடுத்திக்கொள்ளப் பார்க்கிறார்கள். ஆனால் பொதுமக்களும் தொழிலாளர்களும் இச்சூழ்ச்சி வலையில் சிக்கிக்கொள்ள மாட்டார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

13-8-46 மாலை செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சி வட்டத்து மானாம்பதியில் இசையறிஞர் தோழர் எம். எஸ். சண்முகானந்தம் அவர்களைப் பாராட்டி ஓர் கூட்டம் நடைபெற்றது. தோழர் சண்முகானந்தம் இசைக்கலையின் வாயிலாகத் திராவிடர் கழகத்தின் நோக்கங்களை நன்கு விளக்கினார். அன்னாருக்கு ஓர் கூசா பரிசாக அளிக்கப்பட்டது.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மிஞ்சும் அற்பப் பொருளைச் சமயக் கல்வியோடு உலகக்கல்விக்கும் செலவு செய்ய நினைத்துவிட்டனர்! (நினைப்புதான்! இன்னும் சட்டமாக்கவில்லை!) அதற்குள்ளாக வந்துவிட்டது கோபம், ஆண்டவன் அடியார்கட்கும் சைவப் பிண்டங்களுக்கும்! கூட்டினார்கள் மாநாட்டை, "சமய வளர்ச்சிக்குத் தடையா?" என்று தாறுமாறாய்க் கூச்சலிட்டு அலறுகிறார்கள்!

இதைவிட ஆச்சரியம், தோழர்களே, அந்த மாநாட்டுத் தலைவர் ஸ்ரீ ஈசான சிவாசாரியார் சுவாமிகளின் அரிய மூளையில் தோன்றிய அற்புத 'சித்தாந்தம்!'

"அறநிலையங்களில் வருவாய் மிச்சப்படுவதற்குக் காரணம் என்ன?"

"(1) அறநிலையங்கள் செய்ய வேண்டிய வேலைகளை அரைகுறையாய்ச் செய்வது. (2) கோயில்கள், (தருமக்) கட்டிடங்கள் முதலியவற்றைப் பழுதுபார்த்துப் புதுப்பிக்கும் திருப்பணியைச் சரியான முறையில் செய்யாதது. (3) நித்திய நைமித்திக உற்சவாதி பூசைகளைச் செய்வதாகிய கிரியை வழிபாடும், சமய அறிவைப் பரப்பி (இந்துமதத்தை) வளர்க்கும் ஞான வழிபாட்டையும் இப்போதுள்ள அர்ச்சகர்—அறநிலைய அதிகாரிகள்—ஆண்டவன் அடியார்கள் சரியாகச் செய்யாமையும், சமயக் கல்விவளர்ச்சியில் கருத்தின்மையும்!" "இந்தக் காரணங்களால் தாம் அறநிலையத்தின் வருவாய் மிச்சமாகிறது" என்ற அரிய காரணத்தைக் கண்டு பிடித்துவிட்டார் மாநாட்டுத் தலைவர்! (சிவனார் தாம் பிராமண வேஷத்துடன் வந்து சிவாச்சாரியாரின் கனவில் கூறினாரோ? அல்லது ஆசாரிய சுவாமிகளின் அந்தராத்மா தான் காந்தியார்க்குக் கூறுவது போல் கூறியதோ? நான் அறியேன்.)

எனவே ஷை குறைகளை நீக்கிக் "கிரியா ஞான" பாகங்களாகிய சமய வழிபாடுகளை ஒழுங்காகச்செய்ய (அறநிலையப் பாதுகாப்புக் கழகங்கள்) முன்வந்தால், இப்போதுள்ள வருவாய்—அறநிலையச் சொத்துக்கள்—மிச்சப்படுவதற்கு வழியே இல்லையாம்! இப்போதுள்ள வருவாய், பூசைக்கே சரியாகச் செலவிடப்படவில்லையாம்! (கிரியா—ஞான வழிபாட்டின் ஆபாசங்களைப் பற்றி இங்கே விளக்க இடமில்லை)

பச்சைக் குழந்தைகள் பாலின்றிச் சாகின்றன. ஏழைப் பிள்ளைகளுக்குத் தலைக்கு எண்ணெய் இல்லை. பஞ்சத்தாலும் பசியாலும் பல லட்சம் மக்கள் மாண்டனர்! உடுக்க உடையில்லை உழைக்கும் மக்களுக்கு! உண்ண உணவில்லை உழவர்களுக்கும் இன்று! படுக்கப் பாயின்றிப் பாமர மக்கள் "காடோ மாமோ, நாடோ நகரோ" என்றலைகின்றனர் தலைசாய்க்க! கல்விகற்க ஆர்வம் இருக்கிறது! கையிலோ காசில்லை கணக்கற்ற குடியானவர்கட்கு! கல்விபெறும் ஆசையுடனும் கையில் காசுடனும் சென்றாலும், கல்லூரிகளில் இடமில்லை எண்ணற்ற மாணவர்களுக்கு!

ஆனால், நாட்டிலே, கடவுள்களுக்கோ, பாலாபிஷேகம்! வைரமுடி சேவை! இலட்சதீபம்! அன்னாபிஷேகம்! உயர்ந்த பட்டாடை! பஞ்சாமிர்த பரமான்னப்படைப்பு! மின்சார அலங்காரம் மெல்லிய படுக்கை! இசையரங்கு! ஆடலழகிகள் சேவை! திருவிழாக்கள் (சாமியார் தாசிவீடு போவது, மட்டையடிபடுவது முதல் மருந்துண்பது வரை) வேதபாராயணம்! தேவார கோஷ்டி! அமிதலசபளி கட்டும் அளவுள்ள (தேவதான) நிலங்களின் வருவாய்! இமயமலைக்கும் இல்லாத வரிசையும் பொன்தகடும் வேய்ந்து உச்சியின் நிழல் தரையில் படாத அளவு உயரமும் அகலமும் உடையதாகக் கட்டிய கோயில்கள்! மண்டபங்கள்! சிற்பங்கள்! தினசரி ஆறு கால பூஜைகள்!.......... இன்னும் என்னென்னவோ! எதிலும் குறைவே இல்லை. "குறைவிலா நிறைவே, கோதிலாக் குன்றே" என்ற மாணிக்கவாசகர் வாக்கு முழு உண்மை!

இப்படி இருந்தும் பூசை சரியாய் நடக்கவில்லை. சரியை, கிரியை, ஞானவழிபாடுகளைச் சரியாய்ச் செய்யவே, தொந்திசமக்கும் புரோகிதராகிய கோயில் பூசைகள் தின்று மிஞ்சிய பொருளையும் பூசைக்கு அஞ்சி அடங்கியுள்ள கோயில் பெருச்சாளிகளின் வயிற்றுக்கே சேர்க்கும்படி வாதாடுகிறார்கள் சிவசாரியார்கள்!

மடத்தின் சொத்தை எல்லாம் பொதுமக்களுக்கு ஆக்கும் நாள் வரும்போது இச்சுயநலமிகள் என்ன செய்வார்களோ?

இந்த நாட்டிலே, எத்தனையோ மத—சமய-ஆச்சாரியார்கள் தோன்றி எத்தனையோ—மதங்களையும் சமயங்களையும் பரப்பியும்—கணக்கில்லாத சமய ஞான நூல்களைப் எழுதிப் பரப்பியும்—கோடானுகோடி கோயில்களும் கடவுள்களும் தோன்றியும்—கல்வியில் 100க்கு 13பேர்தாம் இந்நாட்டில் கற்றவராம் நிலையும், அறியாமையும், பஞ்சமும், பிணியும், ஒற்றுமையின்மையும், மீளாத அடிமை வாழ்வுமே கைகண்ட பலனாகப் பெற்று வகுப்புவாதத்தையும் வருணாசிரமத்தையும் வளர்க்கும் காங்கிரசாரின் காருண்ய ஆட்சியிலே வாழ்கிறோம்! என்றால் இன்னும் இந்தச் சல்லிக்காசுக்கும் உதவாத சமயங்களும், பாழாய்ப்போன கோயில்களும் கடவுள்களும் எதற்காக? அவற்றிற்காகச் சொத்துக்களும் வருவாய்களும் வீணாக ஏன் செலவழிக்கப்படவேண்டும்? அறநிலையங்களின் செலவை மட்டுப்படுத்தி—ஏன்? அறநிலையங்களையே ஒழித்துவிட்டு—அவற்றை எல்லாம் கல்வி நிலையங்களாக்கினால் பிறகு, "கல்லார் நெஞ்சில் நில்லா ஈசன்," நம்மிடம் நிலைத்து நின்று அருள் செய்யமாட்டானா? இந்த அரிய செயலை, அன்பர் அவிநாசிலிங்கங்களும், ஆந்திரகேசரிகளும் செய்ய முன்வருவார்களா? அப்போதல்லவா "சித்தாந்தம்" (அறிவின் எல்லை) மக்களுக்கு வேண்டிய சமயமாகும்?

பூனா சத்தியாக்கிரக நாள்

19-8-46 பிற்பகல் 3மணிக்கு திருப்பத்தூரில் ஷெடியூல்டு வகுப்பு பெடரேஷன் சார்பில் தோழர் எம். இராமதாஸ் அவர்கள் தலைமையில் நடந்த ஓர் பொதுக்கூட்டத்தில் பூனா சத்தியாக்கிரகிகளைப் பாராட்டியும், பூனா ஒப்பந்தத்தை மாற்றியமைக்கும்படியும், தனித்தொகுதியை வற்புறுத்தியும், பிரிட்டிஷ் தூதுவர் திட்டத்தைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கோவை மாவட்டத் தோழர்களுக்கு,

நமது மாவட்டத்தில் திராவிடர் கழக நிதி வசூல்செய்ய வேண்டியிருப்பதால், நிதி டிக்கட்டுகளைத் தோழர் பாலகுரு அவர்கள் ஒவ்வொரு இடங்களுக்கும் கொண்டுவருவார். தயவுசெய்து அவருடன் ஒத்துழைத்து நிதி திரட்டிக்கொடுக்க வேண்டுமாய்க் கோவை மாவட்டத் தோழர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

என். அர்ச்சுனன்,
தலைவர், திராவிடர் கழகம்,
கோவை மாவட்டம்.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

மறக்கமாட்டார்கள். அது தேசியமென்றால், அதைத்தான் நாங்களாகிய சமதர்மிகளும் சொல்லுகின்றோம்; தேசியத்தில் எந்த தேசமானாலும் சரி எந்த மகாத்மா ஆண்டாலும் சரி, போரின் மனப்பான்மையும், சண்டையும் இல்லாமல் போகாதென்கின்றோம்.

தேசியமும் மூட நம்பிக்கையும்

எந்த தேசியத்திலும் மூடநம்பிக்கையை ஆதரிக்காமலிரார். மதங்களை ஆதரிக்காத தேசியம் உலகிலில்லை; இருக்கப் போவதுமில்லை. நேராக ஆதரிக்காவிடினும், பாராமுகத்தோடாகிலும் மதங்களை தேசியம் தழுவியே தீரும். இதைச் செய்யாத சுயராஜ்யம் எங்குமில்லை. தேசியம், அதாவது சுயராஜ்யத்தில் சோவியத் நாட்டைத் தவிர, மற்ற எந்த சுயராஜ்ய நாடு மதத்தை எதிர்த்து நிற்கின்றது? காந்தியார் சுயராஜ்யத்தில் மாத்திரம் மதத்தைத் தடுக்கப் போகின்றார்களா? அது இல்லையென்றே தீர்க்கமாகச் சொல்லலாம்; தீண்டாதாரை கோவிலில் போகவிடுவது, மதத்தைத் தடுப்பதற்கு அடையாளமல்ல, பாமர மக்களை இன்னமும் மூடநம்பிக்கையில் ஆழ்த்தி வைக்கத்தான் இந்த கோவில் பிரவேச உபாயத்தைக் காட்டுகிறதென்று அறிதல் வேண்டும். வர்ணாச்சிரம தர்மத்தை ஆதரிப்பதும் மதத்தை தழுவவிடுவதல்ல இந்த உபாயமும் ஏழை மக்கள் சண்டைகள் செய்து அவதிப்படுவதற்குத்தான் ஏற்பட்டுள்ளது. இந்து மகமதிய ஒற்றுமை என்ற போதே, இனிவரும் சுயராஜ்யம் மதங்களை ஆதரிக்கும் சுயராஜ்யமேயொழிய வேறல்ல என்பது விளங்குகின்றது. இதை நாம் மறக்கவேண்டியதில்லை. இவ்விரு மதஸ்தர்கள் செய்துகொண்ட ஒற்றுமை ஒப்பந்தத்தில், அவரவர் மதங்களைச் சுயராஜ்யத்தில் ஆதரிப்பதாகவே உடன்பட்டுள்ளார்கள். மதங்களை ஒழித்துவிடாமல் ஆதரித்து வருவதால், மதப்பித்து வளருமென்பதற்கு என்ன சந்தேகம்.

(தொடரும்)

2ம் உலகப்போரில் (1939-1945) அழிவு விவரம்

2ம் உலகப்போரில் சுமார் 33800 கோடி பவுன் மதிப்புள்ள பொருள்கள் அழிவுற்றனவாம். சுமார் 2 கோடி மக்கள் உயிரிழந்தனராம். காயம்பட்டு, கை, கால், கண் முதலியன இழந்தோர் தொகை குறிப்பாகக் கூறுதற்கியலவில்லை. முதல் உலகப் போரில் (1914-1918) சுமார் 8400 கோடி பவுன் மதிப்புள்ள பொருள்கள் அழிவுற்றதாயும், சுமார் 85 இலட்சம் மக்கள் உயிர் துறந்ததாயும் தெரிகின்றது.

கீழே காணும் அட்டவணைகளில் ஒவ்வொரு நாட்டின் இழப்பும் நன்கு புலனாகும்.

பொருளழிவு

1ம் உலகப்போர்

பிரிட்டன்	1000	கோடிபவுன்
அமெரிக்கா	500	,,

மற்றவை இதர நாடுகளுக்கு.

2ம் உலகப்போர்

பிரிட்டன்	2000	கோடிபவுன்
அமெரிக்கா	7000	,,
இரஷ்யா	3000	,,
ஜெர்மனி	4600	,,
ஜப்பான்	1400	,,
இட்டாலி	500	,,
இதர நாடுகள்	15300	,,

மக்களழிவு

	1ம் உலகப் போர் ஆயிரம்	2ம் உலகப் போர் ஆயிரம்
பிரிட்டன்	812	357
அமெரிக்கா	126	250
இரஷ்யா	1700	7000
பிரான்ஸ்	1350	450
ஜெர்மனி	2000	3300
இட்டாலி	460	200
சைனா		3180
ஜப்பான்	303-பேர்தான்	2550

மற்றவை இதர நாடுகளுக்கு

நீத்தார் நினைவுநாள்

அன்புடையீர்! எங்கள் அன்னை திருமதி சிவகாமி அம்மையார் மூன்று நாள் உடல் நலிவு காரணமாக, 26-8-46 திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு தமது 70வது வயதில் இயற்கை முடிவை எய்தினார்கள். வரும் 4-9-46 புதன்கிழமையன்று நீத்தார் நினைவு நாள் வைக்கப்பட்டுள்ளது. எங்கள் மூன்று சகோதரிகள் சார்பாகவும் நாங்கள் இதனைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அ. ப. அர்த்தநாரி,
ப. கண்ணன், கலகண்டபுரம்.

விற்பனைக்கு

"பார்ப்பனப் படுமோச விளக்கம்" என்னும் இந்நூல் டிம்மி 1/8 சைசில் 16 பக்கங்களுடன் வெளிவந்துள்ளது. சுருக்கமாகப் பாக்களில் மிகத் தெளிவாகவும், அழகாகவும் சொல்லப்பெற்ற இக் கருத்துக்கள் நம் இயக்க மாணவ மணிகளுக்கும், திராவிடத் தோழர்களுக்கும் மிகவும் பயன்படும். விலை 0-3-0. தனிப்பிரதி வேண்டுவோர் 0-3-9 அணா தபால் தலை அனுப்புக.

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Catchery street, ERODE.